**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B.ராஜா, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி,வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12ம் நாள்)

**இடைநிலை மனு எண்.34/2022**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.15/2022**

குணசேகரன்
குள்ளி (எ) மாணிக்கம் ... மனுதாரர் / மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

குமார்
த/பெ குள்ளி (எ) மாணிக்கம் .... எதிர்மனுதாரர்/ எதிர்மேல்முறையீட்டாளர்

மனுவானது இறுதியாக, கடந்த 26.02.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.வி. வரதராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். திருப்பதி, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்துள்ள மேல்முறையீட்டு வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களைக் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ….

**உத்தரவு**

**01)** மேல்முறையீட்டு இறுதி தீர்ப்பு பிறப்பிக்கும் வரையில், அ.வ.எண்.84/2017 வழக்கில், விசாரணை நீதிமன்றத்தில் கடந்த 17.02.2022ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு, தீர்ப்பாணையை நிறுத்தி வைக்க வேண்டுமென்ற பரிகாரத்திற்காக உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 41 விதி 5 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02)        மனுவிற்கான பிரமாணப் பத்திரத்தின் சுருக்கம்:-**

மனுதாரர் மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர் ஆவார். அ.வ.எண்.84/2017 வழக்கில் கடந்த 17.02.2022 ம் தேதி விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பிற்கு எதிராக மனுதாரர் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார். எனவே, மேல்முறையீட்டின் இறுதி தீர்ப்பு பிறப்பிக்கப்படும் வரை விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள அசல் வழக்கின் தீர்ப்பு, தீர்ப்பாணையை நிறுத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03)        எதிருரையின் சுருக்கம்:-**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

மனுவிற்கான பிரமாணப் பத்திரத்தில், மனுப் பரிகாரத்திற்காக கூறியுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது கிடையாது. மேல்முறையீட்டினை இழுதடிப்பு செய்யும் நோக்கத்தில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**04)** இம்மனுவினை பொறுத்த வரையில் மனுதாரருக்கு மனுப் பரிகாரம் கிடைக்கக்கூடியதா ? இல்லையா ? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**05)        பிரச்சனைக்குரிய தீர்வு**

இருதரப்பிலும் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும், ஆவணச் சான்றுகளும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டு மனுக்கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்துள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த

வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தாவா சொத்தில் உரிமைமூலம் விளம்புகை பரிகாரம் வேண்டியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். விசாரணை நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில், இருதரப்பு விசாரணைக்குப்பின், தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து மனுதாரர் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

மேல்முறையீட்டின் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் வரை விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு, தீர்ப்பாணையை நிறுத்தி வைக்கவேண்டுமென மனுப்பரிகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது. இருதரப்பு முழுமையான விசாரணைக்குப்பின், மேல்முறையீட்டில் இன்று இந்நீதிமன்றத்தால் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள மனுப்பரிகாரம் தன்னிச்சையாக செயலற்றுப்போய் உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

ஆகையால், மேற்கண்ட காரணங்களினால், மனுதாரர் சட்டப்படியாக இம்மனுவில் எந்தவொரு மனுப்பரிகாரம் பெற முடியாது என முடிவு செய்யப்பட்டு, மனுப் பிரச்சனை இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

06) **முடிவில்,** இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு,

பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.03.26 16:17:36 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**

இல்லை

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.03.26 16:17:40 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.